DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 5 /2019

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பூச்சிவாசன் | Father's/Husband's Name : ராமசாமி | |
| Village | : அம்மச்சியாபுரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** பிரதிவாதி முருகனின் அண்ணனான பெருமாளுக்கு எனது சகோதரியை திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். மேற்படி பெருமாளும் முருகனும் சொத்து தகராறு காரணமாக பேச்சு வார்த்தை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 30.12.2002 ம் தேதி பிரதிவாதி பாலம்மாளிடமிருந்து தாவா சொத்து சம்பந்தமாக பவர் பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறார் என்றால் மொத்தம் 2 ஏக்கர் 97 செண்டில் வட பக்கம் உள்ள 1 ஏக்கர் 20 செண்ட் நிலத்திற்கு பவர் எழுதி கொடுத்துள்ளார். வழக்கு சொத்தும் மொத்த சொத்தின் வடக்கு பக்கம் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, தெற்கு பக்கம் உள்ளது. பிரதிவாதி முருகன் பவர் வாங்கிய 1 ஏக்கர் 20 செண்ட் நிலத்தை அவரது மனைவி மகேஸ்வரிக்கு கிரையம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

2) மேற்படி கிரைய பத்திரம் எழுதி வாங்கிய 2002 ம் ஆண்டிலிருந்தே பிரதிவாதி அந்த சொத்தின் ஓரத்தில் மாட்டுக்கொட்டம் அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 2014 ம் ஆண்டு வாதி கிரையம் பெற்றதாகச் சொல்லியுள்ளபோதும் இன்று வரை தாவா சொத்திற்காக பட்டா வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான், வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா வாங்கவில்லை. வாதி கிரையம் வாங்கிய சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் இருப்பதால் தான் வருவாய் துறையினர் பட்டா வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி கிரையம் வாங்கியதாக சொல்லும் தாவா சொத்தில் இன்று வரை பிரதிவாதி தான் அனுபவ்ம செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார்.

3) பிரதிவாதிக்கும் எனது மச்சினன் பெருமாளுக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக வாதி கேட்டுக்கொண்டதால் நான் அவருக்கு ஆதராக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மச்சினன் பெருமாளின் தூண்டுதலின்பேரில் தான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 3 செண்டை வாதி பெயருக்கு மோசடியாக கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது சகோதர சகோதரிகளும் பாலம்மாளின் பேரன் பேத்திகள் என்றால் சரிதான். 2014ம் ஆண்டு வாதி கிரையம் வாங்கும்போது சொத்தை அளந்து பார்த்து வாங்காமல் மோசடியாக கிரைய பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 08.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.08 18:06:08 +0530

District Munsif,
Aundipatti.